வளன் ஆயம்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# “கொங்கு மக்கள் வழிபடும் மல்லாண்டை”

**நளினி.செ,**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு,**
**பாரதியார் பல்கலைக்கழகம்,**
**கோயம்புத்தூர்.**

முன்னுரை:

பெரும் பான்மையான மக்கள் வழிபடுவது பெருந்தெய்வ வழிபாடு என்றும் ஒரு குறிப்பிட்ட இனக்குழு வழிபடுவது சிறுதெய்வம் என்றும் கூறப்படுகின்றன. இத்தகைய வழிபாடுகளில் சிறுதெய்வ வழிபாடுகளுள் ஒன்றான கொங்கு நாட்டு மக்கள் வழிபட கூடியது மல்லாண்டை ஆகும். இத்தெய்வம் இறந்து பட்டவர்களுக்கு நடுகல் நட்டு வழிபடும் மரபைச் சார்ந்து அமைந்துள்ளது.

கலைச்சொற்கள்:

தாம்பு ஓட்டுதல் - மாடுகளை பயன்படுத்தி தானியங்களை அறுவடை செய்தல்.

கம்பங்கருது - கம்பு தானியத்தின் கதிர்

பங்காளி - தன் சமூக குலத்தின் வழி சகோதரன்

ஆய்வு சுருக்கம்:

ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்கள் மட்டுமே வழிபாடு செய்வது சிறு தெய்வ வழிபாடு எனப்படும். வீரமரணம் கொண்ட பின்பு அவர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் உண்டு. அதுபோல் மல்லாண்டை என்பவர் மாடுகளின் காலில் மிதிப்பட்டு உயிர் நீத்தார். குன்னுடையான் என்னும் அண்ணமார்களான பொன்னர் சங்கரின் தந்தை, மல்லாண்டையின் தலை உருண்டு செல்வதை கண்டு மல்லாண்டையை களத்தின் காவல் தெய்வமாகவும் அதே சமயம் வளத்தினை கொடுக்கும் தெய்வமாகவும் வழிபட்டனர். வேளாளர் சமூகத்தை சார்ந்தவர் அருந்ததியர் சமூகத்தை சார்ந்த ஒருவரை தெய்வமாக வணங்கியுள்ளர் என்பதை இதன்வழி அறியலாம். தற்போது மல்லாண்டை தெய்வ வழிபாட்டின் போது பழியிடும் ஆட்டின் தலை அருந்ததியர் சமூகத்திற்கே வழங்கப்படுகின்றன.

தொல்காப்பியத்தின் வழி நடுகல்:

சங்ககாலத்தை சேர்ந்த காலத்தால் முந்திய முதன் முதலில் கிடைத்த இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இதன்கண் நடுகல் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

“காட்சிக் கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தரு சிறப்பின் பெரும்படை வாழ்த்தலென்று

இருமூன்று வகையிற் கல்லொடு புணர" -(தொல்-புறத்-5)

எனும் இவ்வரிகள் காட்சி, கால்கோள், நீர்ப்படை நடுதல், பெரும்படை, வாழ்த்தல் என நடுகல் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

சங்க இலக்கிய சான்றுகள்:

சங்கப் புலவர்கள் இருபத்தைந்து பேர் நடுகல் தொடர்பான முப்பது பாடல்களைப் பாடியுள்ளனர். திருவள்ளுவரும்,

"என்னை முன் நில்லன்மின் தெவ்வீர்
முன்னின்று கல்நின் றவர்" -(குறள்-771)

எனும் குறளின் மூலம் வீரன் ஒருவனது கூற்றாக எனது தலைவனை எதிர்த்தவர்கள் போரில் இறந்து நடுகல் ஆகியுள்ளனர். எனவே அவனை எதிர்த்தால் அந்நிலைதான் உங்களுக்கும் ஏற்படும் என்னும் வகைமையில் அமைந்துள்ளது.

நடுகல் வரலாறு:

தமிழகத்தில் நடுகல் வழிபாடு சங்க காலத்திற்கு முன்பிருந்தே வந்துள்ளதை அறியமுடிகிறது. பெருங்கற்காலம் தொடங்கியே தமிழகத்தில் நீத்தாருக்கு நினைவுக்கற்கல் எடுப்பதும் அவர்களை வழிபடும் வழக்கமும் இருந்து வருகிறது. இவ்வாறு இறந்து பட்டவர்களுக்கு எடுக்கப்படும் நடுகல் சிறப்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. நடுகல்லானது நினைவுக்கல் என்றும் வீரக்கல் என்றும் அழைக்கப்படுகிறது.

கொங்கு நாட்டில் மயிலாபுரிப் பட்டணத்தின் அருகில் (அந்தியூருக்குக் கிழக்கில்) உள்ள ஊஞ்சவனத்தில் சங்ககால நடுகல் கோயிலைக் காணலாம். அத்துடன் தாளவாடிக்கு மேற்கில் சிக்கள்ளியில் சங்ககால, இடைக்கால, பிற்கால நடுக்கற்களை ஒரே இடத்தில் காணலாம். பர்கூர் மலையில் நூற்றுக்கணக்கில் நடுகற்கள் உள்ளன. நடுகல் வழிபாடு கொங்கு நாட்டில தொன்று தொட்டு அமைந்துள்ளன என்பதற்கு இவை சான்று ஆதாரமாக அமைந்துள்ளன.

காப்பியங்களில் களம்:

"……………………..புரி ஞெகிழ்பு உற்ற
குமரிக் கூட்டில் கொழும் பல் உணவு
கவரிச் செந்நெல் காய்த்தலைச் சொரிய"

என்னும் வரிகளில் எருமை களத்தில் உள்ள நெற் மூட்டைகளை உரசுவது போன்ற செய்திகள் களம் இருந்த செய்திகளை மெய்ப்படுத்துகின்றன.

"ஆர்புறு பலாப் பழம் அழிந்த நீள் களம்
போர்பினான் மலிந்து உடன் பொலிந்த"

வயல்களில் உள்ள களங்களில் பலாப் பழங்கள் சிதறி கிடந்தன. அதனை அறுவடை காலங்களில் நெற்கதிர்களை அடுக்குவதற்கு சுத்தம் செய்தனர் போன்ற செய்திகள் சீவக சிந்தாமணியில் நாமகள் இலம்பகத்தில் கிடைக்கின்றன. இத்தகைய வயல்களில் செய்திகள் வாயிலாக களம் அறுவடை செய்யும் வயல்களில் அமைந்துள்ளன என்பதை அறியலாம்.

குன்னுடையான் கதை:

அண்ணமார் சுவாமி கதைகளில் இடம்பெறும் நல்லதங்காளின் அண்ணமார்கள் பொன்னர், சங்கர் ஆவார். இவர்களுடைய தந்தையே குன்னுடையான் ஆவார். இவருடைய சமூகம் கொங்கு வேளாள சமூகமாகும். இவருக்கு பெற்றோர் இல்லாததால் இவருடைய பங்காளிகளே திருமணம் செய்து வைக்க தாமதம் செய்தார்கள். பிறகு தாமரை நாச்சியாரை திருமணம் செய்து கொள்கிறார். பல போராட்டங்களுக்கு பிறகு பொன்னர், சங்கர், நல்லதங்காள் ஆகிய மூவரும் பிறக்கின்றனர். மேற்கண்ட கதையை குறித்து அண்ணமார் சுவாமி கதை, பொன்னர் சங்கர் கதை, நல்லதங்காள் கதை என்று பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

அண்ணன்மார் சுவாமி கதை, கள்ளழகர் அம்மானை, பொன்னர் சங்கர், வளநாடு பொன்னர் சங்கர் வரலாறு போன்ற பல புத்தகங்கள் பொன்னர், சங்கர் கதைகளை கூறினாலும் மேற்கண்ட கருத்துக்கள் கொங்கு நாட்டில் கிடைத்த தரவுகள் ஆகும்.

மல்லாண்டை தோற்றம்:

காடுகளில் அறுவடை செய்த தானியப் பயிர்களை அறுத்து களத்தில் போட்டு மாடுகளை விட்டு தாம்பு ஓட்டுவர். இதே போல் குன்னுடையானும் கம்பங்கருதை அறுத்து களத்தில் போட்டு சுமார் 60 மாடுகளை வைத்து தாம்பு ஓட்டினார். இவ்வாறு தாம்பு ஓட்டும் பொழுது கருதுகளை வெளியில் சிந்தாமல் பார்த்து கொள்வதற்கு அருந்ததியர் சமூகத்தை சார்ந்த மல்லாண்டை பார்த்து கொண்டார். கவனம் தவறி மாட்டு கால்களில் மிதிப்பட்டு சிக்கிக் கொண்டார் பின்பு மீள முடியாமல் இரவு முழுவதும் மாடுகள் மிதித்ததால் உடலில் இருந்து தலை மட்டும் உருண்டது. இதனை கண்ட குன்னுடையான் அத்தலையை களத்தில் எடுத்து வைத்து வணங்கினர். பின்பு களத்திற்கு காவல் தெய்வமாக பழியிட்டு வழிபட்டனர். வீரமரணம் எய்தியவர்களுக்கு நடுகலிட்டு வழிபடுவது போன்று களங்களில் மல்லாண்டையை வழிபடுகின்றனர்.

களத்தில் தாம்பு ஓட்டும்பொழுது மல்லாண்டை தெய்வத்திற்கு ஆடுகளை பழிகொடுப்பர். அவ்வாறு பழிகொடுத்த பின்னர் அருந்ததியர் சமூகத்திற்கே பழியிட்ட ஆட்டுத்தலையை கொடுப்பர். தற்பொழுதும் கொங்கு நாட்டில் இவ்வழிபாடு தொடர்கிறது. கொங்கு நாட்டில் கந்தப்ப கவுண்டன் புதூர் என்னும் ஊரில் இத்தரவுகள் கிடைத்தன. மேலும் நிலக்கடலையை மலாட்டை என்று கூறும் வழக்கமும் உண்டு. மேற்கண்ட தரவுகளின் படி ஒரு நபரின் பெயராக மல்லாண்டை என்பது இருந்திருக்கலாம்.

மல்லாண்டை பெயர்காரணம்:

மல் என்றால் வளம். மல்லாண்டை என்பதை வளத்தின் தெய்வம் அல்லது தலைவன் என்று பொருள் கொள்ளலாம். நாயக்கர்கால கல்வெட்டுகளில்

"மல்லாயி அவ்வை மகமை"

என்றொரு வரி வருகிறது. இது மல்லாயி என்ற தெய்வ வழிபாட்டில் அளிக்கப்பட்ட காணிக்கை என்று பொருள் கொள்ளப்படுகிறது என்று மரபாளன் பெருவாகை கொண்டான் அட்டப்பாடி குறிப்பிடுகிறார். மேலும் இவர் குயவர்களின் களத்தில் உள்ள தெய்வத்திற்கும்

பழி தரப்பட்டன என்னும் குறிப்பினால் வேளாண்மை தொழிலில் மட்டுமின்றி களம் அமைக்கப்படும் அனைத்து இடங்களில் மல்லாண்டை வழிபாடு இருந்தமையை காணலாம்.

மள்ளர் இன மக்கள்:

மல்லாண்டை வழிபாடு மள்ளர் இன மக்களால் மட்டுமே நிகழ்த்தப்பெறுகின்றது என்று தொல்லியல் அறிஞர் முனைவர் சி. மகேசுவரன் அவர்கள் தம் ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மேலும், கொங்கு நாட்டு பகுதியான தாசபாளையத்தில் உள்ள மல்லாண்டை தெய்வத்தை ஆய்வு செய்த கல்வெட்டு ஆராய்சியாளரான து. சுந்தரம் அவர்கள் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் சாலையோரமாக பெரிய மல்லாண்டை கல் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். அப்பகுதி களமாக இருந்து தற்போது நவீன வளர்ச்சியில் சாலையின் அருகே அமைந்திருக்கலாம்.

முடிவுரை:

இறந்து பட்ட ஒருவரை தெய்வமாக வணங்கும் மரபு தொன்றுதொட்டு தமிழ் மரபில் உள்ளது. கொங்கு நாட்டின் களத்தில் வைத்து வளம் சிறக்க வேண்டும் என்பதற்காக பழியிட்டு வணங்கும் தெய்வமாக மல்லாண்டை அமைந்துள்ளது. தரவின்படி மல்லாண்டை என்பது ஒரு நபரின் பெயர்தான் என்பதற்கு உகந்தவாறு இன்றுவரை அத்தெய்வத்திற்க ஆடுகளை பழியிட்டபின் ஆட்டின் தலையை அருந்ததியர் சமூகத்திற்கே வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தன் களத்தில் வேலை செய்து இறந்துபட்டேரை தெய்வமாக வணங்கிய முன்னோர்களின் மரபு போற்றும்படி அமைந்துள்ளது.

துணை நூற்பட்டியல்:


தமிழகக் கோயிற் கலை வரலாறு - அம்பை மணிவண்ணன்,
இந்துசமய அறநிலைத்துறை பதிப்பகம்.

சிலப்பதிகாரம் - பொ. திருகூடசுந்தரம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு.

திருக்குறள் - புலியூர்க் கேசிகன்,
பூம்புகார் பதிப்பகம்.

சீவக சிந்தாமணி - சு. துரைசாமிப் பிள்ளை,
சைவ சிந்தாந்த நூற்பதிப்பு கழகம்.